# ஷோபா டெவலப்பர்ஸ் தனது கால் தடத்தை விரிவுபடுத்துகிறது

ஷோபா டெவலபர்ஸ் நிறுவனம் தனது ஆடம்பர குடியிருப்பு திட்டம் தென்னிந்தியாவின் மான்செஸ்டர் என அழைக்கப்படும் தமிழ்நாட்டின் இரண்டாவது பெரிய நகரமான கோயம்புத்தூரில் நிறைவடைந்ததாக அறிவித்தது. இத்திட்டம் கடந்த 2008-ம் ஆண்டு ஜனவரி மாதம் தொடங்கப்பட்டது., இது தமிழ்நாட்டில் ஷோபா டெவலபர்ஸ் கட்டி வெற்றிகரமாக கட்டி முடித்துள்ள முதலாவது திட்டமாகும்.

தொண்டாமுத்தூர் பிரதான சாலையில் பரந்து விரிந்த ஹரிஸ்ரீ கார்டனில் அமைந்துள்ள ஷோபா எமரால்ட் ஆர்.எஸ்.புரத்திற்கு மிக அருகில் அமைந்திருப்பதுடன், கோயம்புத்தூரில் அமைந்துள்ள மிகுந்த ஆடம்பரமான திட்டங்களில் ஒன்றாகும். 11.69 ஏக்கர் பரப்பில் சிறப்பாக வடிவமைக்கப்பட்ட 61 குடியிருப்புகள் இந்த திட்டத்தில் அடங்கும். கண்ணுக்கு இனிய மருதமலையை பின்பலமாக கொண்டுள்ள இந்த குடியிருப்புகள் அமைதியான சூழலில் அமைக்கப்பட்டுள்ளன.

ஷோபா எமரால்ட் 4 வகையான குடியிருப்புகளை சர்வதேச தரத்தில் கொண்டுள்ளது. 2700 சதுர அடி முதல் 3500 சதுர அடி வரையிலான பரப்பில் அமைந்துள்ள இந்த குடியிருப்புகளில் 4 படுக்கையறைகளை கொண்ட 22 வீடுகளும், 3 படுக்கையறைகளை கொண்ட 39 வீடுகளும் உள்ளன. ஒவ்வொரு வீட்டின் முன்பும் சிறப்பான முறையில் புல்வெளி அமைக்கப்பட்டுள்ளது. கோயம்புத்தூரின் அழகுக்கு அழகு சேர்க்கும் வகையில் வடிமைக்கப்பட்ட இத்திட்டத்தில் உலகத்தர மிக்க அதிநவீன வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. இத்திட்டத்திற்கான மொத்த முதலீடு சுமார் ரூ.75 கோடியாகும்.

இங்கு அனைத்து வித நவீன வசதிகளும் உலக தரத்தில் செய்யப்பட்டுள்ளது என்று இதன் நிர்வாக இயக்குநர் சர்மா மற்றும் பிராந்திய இயக்குநர் பாரதி தெரிவித்துள்ளனர்.